## குளித்தலை நகராட்சி

31.12.2021.ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு
நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற்ற சாதாரணக்கூட்டம்

ப.சுப்புராம்,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

-------

பொருள்–01. குளித்தலை நகராட்சி ஆணையர் திரு.ப.சுப்புராம் அவர்களின் டிசம்பர்–2021.ஆம் மாதத்தின் தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்–02. குளித்தலை நகராட்சி பொறியாளர் அவர்களின் டிசம்பர்–2021.ஆம் மாதத்தின் தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்–03. குளித்தலை நகராட்சிப் பகுதியில் நவீன தகனமேடை அமைக்கும் பணிக்கு ரூ.150.00 லட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள 17.12.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 2 ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|
| 1) | குளித்தலை நகராட்சிப் பகுதியில் மயான மேடையை நவீன தகன மேடையாக மேம்படுத்தும் பணி | திரு.R.N.வெங்கடாஜலபதி, குளித்தலை. | 4.50 % above |
| | | குட்கேட் என்வேர் சிஸ்டம், மௌலிவாக்கம், சென்னை. | 7.30% above |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் செய்யப்பட்டதில் மதிப்பீட்டு விகிதத்திற்கு திரு.R.N.வெங்கடாஜலபதி, ஒப்பந்ததாரர் 4.99% கூடுதலாகவும், குட்கேட் என்வேர் சிஸ்டம், சென்னை என்ற நிறுவனம் 7.30% கூடுதலாகவும் கொடுத்து உள்ளனர். இவர்களில் குறைவான கூடுதல் குறிப்பிட்டுள்ள திரு.R.N.வெங்கடாஜலபதி ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம். திட்டப்பணி என்பதாலும், குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க வேண்டியதாலும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1475/2021/இ1)

பொருள்–04. கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரைகளின்படி, கொரோனா வைரஸ் தொற்று மூன்றாம் அலை அதிவேகமாக பரவி வருவதாலும், தற்போது ஒமைக்ரான் தொற்று பரவும் சூழ்நிலை உள்ளதாலும், இந்நகராட்சி பகுதியில் தொற்று பரவாமல் தடுக்கும்பொருட்டு, முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள தேவைப்படும் பிளீச்சிங் பவுடர், சுண்ணாம்புத்தூள், லைசால், முகவுரை, கையுரைகள், ஆசிட், பினாயில் மற்றும் இதர பொருட்கள் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.10,00,000/–க்கு (ரூபாய் பத்து லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.650/2021/எச்1.

பொருள்– 05. குளித்தலை நகராட்சிக்கு எதிராக தொடரப்படும் வழக்குகளில் நகராட்சி சார்பாக எதிர்வாதுரை தயார்செய்து ஆஜராகும் பொருட்டு, கீழ்க்கண்ட விபரப்படியான நகராட்சி நிலைக்குழு வழக்கறிஞர்களை நியமனம் செய்துகொள்ளவும், அரசு விதிகளின்படி வழக்கறிஞர் கட்டணம் வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | நீதிமன்றம் | வழக்கறிஞர் பெயர் |
|---|---|---|
| 1) | மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை. | திரு.K.S.M.சாகுல்அமீது, பி.ஏ., பி.எல்., |
| 2) | கரூர் மாவட்ட நீதிமன்றம், கரூர் | திரு.R.குடியரசு, பி.எஸ்சி., பி.எல்., |
| 3) | சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை | திரு.AN.ராமநாதன், பி.ஏ., பி.எல்., |

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.2093/2021/சி1)

பொருள்– 06. குளித்தலை நகராட்சியில் நகர்ப்புற ஏழைகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில், ரூ.100.00 கோடி மதிப்பீட்டில் நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டம் என்ற திட்டத்தின்மூலம் குளித்தலை நகராட்சியை தேர்வு செய்து இத்திட்டம் செயல்பட உள்ளது. எனவே, இத்திட்டம் மூலம் ரூ.2.00 கோடி அளவிற்கு வெவ்வேறு பணிகள் செய்ய கீழ்க்கண்ட விவரப்படி அதன் எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு பணிகள் செய்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ஒப்புதல் வேண்டுவதற்கு அனுப்பி வைப்பதற்காக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | பணியின் விபரம் | தொகை ரூ. (லட்சத்தில்) | |
|---|---|---|---|
| 1. | குளித்தலை நகராட்சியின் நுண் உரக்கிடங்கு மற்றும் குப்பை தரம் பிரித்தல் மையம்–1 மற்றும் 2ற்கு ஒப்பந்த பணியாளர்கள் விநியோகம் செய்தல். | 5.00 | |
| 2. | குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட பெரியார்நகர், அண்ணாநகர், ஜெய்மகால் அவென்யூ மற்றும் பாலாஜிநகர் பூங்காவிற்கான இடங்களில் 500 மரக்கன்றுகள் நட்டு பராமரித்தல். | 10.00 | |
| 3. | வார்டு எண்.23 அண்ணாநகர் பூங்காவில் நடைபாதை அமைத்தல் | 10.00 | |
| 4. | வார்டு எண்.23 அண்ணாநகர் பூங்காவில் சுற்றுச்சுவர் அமைத்தல் | 23.80 | |
| 5. | பெரியார்நகர் பூங்காவில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் | 45.00 | |
| 6. | டவுன்ஹால்தெருவில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 9.60 | |
| 7. | அண்ணாநகர் பிள்ளையார்கோவில்தெரு கிழக்குப் பகுதி சாலையில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 6.00 | |
| 8. | அண்ணாநகர் பிள்ளையார்கோவில்தெரு குறுக்குத் தெருவில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 9.40 | |
| 9. | பள்ளிவாசல்தெருமுதல் கந்தசாமிபிள்ளைதெரு வரையில் உள்ள கண்ணாற்றில் தூர்வாருதல் | 10.00 | |
| 10. | மாரியம்மன்கோவில்தெரு முதல் பழையகோர்ட்தெரு வரை உள்ள கண்ணாற்றில் தூர்வாருதல் | 7.00 | |
| 11. | அண்ணநகர் புறவழிச்சாலையில் உள்ள கண்ணாற்றில் தூர்வாருதல் | 6.00 | |
| 12. | கம்பன்தெருவில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 6.00 | |
| 13. | காவேரிநகர் குறுக்குத்தெருவில் (பூங்கா சாலை–1) மழைநீர் வடிகால் அமைத்தல் | 8.50 | |
| 14. | காவேரிநகர் குறுக்குத்தெருவில் (பூங்கா சாலை–2) மழைநீர் வடிகால் அமைத்தல் | 6.20 | |

| | | |
|---|---|---|
| 15. | பெரியபாலம் முதல் பிள்ளைத்தோப்பு வரையுள்ள சிமெண்ட் சாலை பராமரிப்பு | 10.00 |
| 16. | பிள்ளைத்தோப்புதெரு முதல் மலையப்பநகர் வரை சிமெண்ட் சாலை பராமரிப்பு | 10.00 |
| 17. | பேராளம்மன்கோவில்தெருவில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 10.00 |
| 18. | பேராளம்மன்கோவில் கிழக்குதெரு மற்றும் குருசாமி மருத்துவமனை சாலையில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 7.50 |
| | மொத்தம் | 200.00 |

அலுவலக குறிப்பு– அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1574/2021/இ1)

பொருள்– 07. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கிவரும் கீழ்க்கண்ட வாகனங்களுக்கு (காலம் 14.01.2021 முதல் 13.01.2023 வரை) ஓராண்டிற்கான காப்பீட்டுத் தொகை ரூ.76554/–ஐ, யுனைடெட் இந்தியா காப்பீடு, குளித்தலை நிறுவனத்திற்கு தொகை செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | வாகனதின் எண் | தொகைரூ. |
|---|---|---|
| 1) | TN-47-AS-5370 | 37903.00 |
| 2) | TN-47-AS-5109 | 19327.00 |
| 3) | TN-47-AS-5098 | 19324.00 |
| | மொத்தம் | 76554.00 |

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி காப்பீடு கழகத்திற்கு தொகை செலுத்தியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

*******

<u>குளித்தலை நகராட்சி</u>

31.12.2021.ஆம் தேதிய சாதாரணக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 290 | பதிவு செய்யப்பட்டது. |
| 2 | 2 | 291 | பதிவு செய்யப்பட்டது. |
| 3 | 3 | 292 | அனுமதிக்கப்பட்டது. |
| 4 | 4 | 293 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 5 | 5 | 294 | அனுமதிக்கப்பட்டது. |
| 6 | 6 | 295 | அனுமதிக்கப்பட்டது. |
| 7 | 7 | 296 | அனுமதிக்கப்பட்டது. |

ஒம்/–ப.சுப்புராம்,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர்,
குளித்தலை நகராட்சி.